TIPS FOR PARENTS

# Homework



## வீட்டுவேலை

மாணவர்கள் பாடசாலையில் வெற்றி பெறுவதற்கு பெற்றோரும் பராமரிப்பு வழங்குபவர்களும் உதவும் ஒருவழி அவர்கள் வீட்டு வேலை செய்யும்பொழுது அவர்களுக்கு ஆதரவு வழங்குதல் ஆகும்.

### வீட்டு வேலை என்றால் என்ன?

மாணவர்கள் வீட்டுக்குக் கொண்டுவரும் பாடசாலை வேலை வகைகளில் சில இவை:

- பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட வேலை ஒதுக்கீடுகளை முடித்தல்
- ஆராய்ச்சி செய்கைமுறை (research project) ஒன்றில் ஈடுபடுதல்
- சிறு சோதனைகளுக்கும் பரீட்சைகளுக்கும் படித்தல்
- பாடசாலையில் கற்ற புதிய திறமைகளைப் பயின்று பார்த்தல்
- பாடசாலை பைன்டர்களையும் பயிற்சி வேலைத் தாள்களையும் ஒழுங்குபடுத்தல்
- ஒரு நாவல் அல்லது பாடப்புத்தகத்தில் சொல்லப்பட்ட சில பகுதிகளை வாசித்தல்

### எங்கு மற்றும் எப்பொழுது வீட்டுவேலை செய்யப்படுதல் வேண்டும்?

- எல்லா மாணவர்களும் ஒரே மாதிரிப் படிப்பதில்லை. சிலர் அமைதியான ஓர் இடத்தில் படிக்க விரும்புகின்றனர். சிலர் இசை பின்னணியில் ஒலிக்கும் பொழுது படிக்க விரும்புகின்றனர். மற்றைய மாணவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து படிப்பது பயன்தருவதாய் இருப்பதைக் காண்கின்றனர். உங்கள் பிள்ளை பற்றி நீங்கள்தான் மிக நன்கு அறிவீர்கள். உங்கள் பிள்ளை தனது வீட்டு வேலையைச் செய்ய மிகப்பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுக்க அவருக்கு உதவுங்கள்.
- வீட்டுவேலைக்கென ஒழுங்கான முறையில் குறித்த ஒரு நேரத்தை ஒதுக்குதல் பயன் தரலாம். மாணவர்கள் பெரும்பாலும் வீட்டுவேலை செய்வதைப் பின்தள்ளிப் போட முயலுவர். பெற்றோர் அதனைச் செய்து முடிக்கும்படி தூண்டுவர். இதனால் வாக்குவாதங்கள் எழக் கூடும். ஒழுங்கான குறித்த ஒரு நேரத்தை வீட்டுவேலைக்கு ஒதுக்கும் பொழுது அது அன்றாட வேலை ஒழுங்கின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறது.
- மாலைப்பொழுதின் ஆரம்பத்தில் மாணவர்கள் கூடிய உடற்சக்தியைக் கொண்டிருப்பர். வீட்டுவேலையை அந்த நேரத்தில் செய்து முடிக்கும் படி தூண்டுங்கள். படுக்கைக்குப் போகு முன்பாக அவர்கள் ஓய்வு எடுக்க நேரம் அனுமதியுங்கள்.

### வீட்டுவேலை செய்வதில் மாணவர்கள் எவ்வளவு நேரத்தை செலவழிக்க வேண்டும்?

- வீட்டு வேலையில் ''சரியான'' அளவு வேலை என்று எதுவும் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆரம்ப வகுப்புகளில் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் வீட்டு வேலை இருக்கவேண்டும் எனவும், மாணவர்கள் உயர் பாடசாலைக்குப் போகும்பொழுது அதன் அளவு படிப்படியாக அதிகரிக்க வேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர்களும் கல்வியாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர்.
- மாணவர்கள் வெவ்வேறு வேகங்களில் செயல்படுகிறார்கள். ஆகவே அவர்கள் வீட்டு வேலையில் கழிக்கும் நேரமும் ஆளுக்கு ஆள் வேறுபடும்.
- மாணவர்கள் தமது வீட்டுவேலையைச் செய்யவும் **அத்துடன்** வேறு செயல்பாடுகளில் பங்குபற்றவும் அவர்களுக்கு நேரம் இருக்கவேண்டும். உடற்பயிற்சி விளையாட்டுகள், இசைப் பாடங்கள், சமயச் செயல்பாடுகள், மொழி வகுப்புகள், தொண்டர் வேலை, விரும்பிய முறையிலான விளையாட்டு எனப் பல இவற்றில் அடங்கும்.
- உங்கள் பிள்ளைக்கு கிடைக்கும் வீட்டுவேலை மிக அதிகமாக இருக்கிறது அல்லது மிகக் குறைவாக இருக்கிறது என்று நீங்கள் கரிசனை கொண்டால் அதுபற்றி வகுப்பு ஆசிரியரிடம் கதைக்கவேண்டும்.

### வீட்டுவேலை செய்வதில் பிள்ளைகளுக்குப் பெற்றோர் எப்படி உதவமுடியும்?

- வயதில் கூடிய பிள்ளைகள் தமது வேலை ஒதுக்கீடுகள் மற்றும் சோதனைகள் என்பவற்றை கவனித்து அவற்றைப் பின்பற்றிச் செய்து முடிப்பதற்கு அவர்களது பாடசாலை நிகழ்வுக் குறிப்புப் புத்தகத்தை (agenda) பயன்படுத்தும்படி ஊக்குவியுங்கள். வேலையை செய்வதற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை, அல்லது பெரிய செய்கைமுறைகளாக (projects) இருந்தால் நாட்களை ஒதுக்கும் கால அட்டவணை ஒன்றினை அவர்கள் உருவாக்குவதற்கு உதவுங்கள்.
- செய்கைமுறை என்ற ஒன்றைத்தவிர வீட்டுவேலை என்பது மாணவர்கள் வகுப்பில் கற்பதை மீளாய்வு செய்யும் ஒரு அப்பியாசமாகவே இருக்க வேண்டும். எனவே மாணவர்கள் வீட்டுவேலையைத் தாமாகவே செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

**உங்கள் பிள்ளைகள் தமது வீட்டு வேலையைச் செய்கின்ற நேரத்தில் நீங்கள் அருகில் இருந்து உங்களின் 'வீட்டு வேலையை' செய்யலாம். கட்டணங்களைச் செலுத்துதல், புத்தகம் வாசித்தல், கடிதம் எழுதுதல் போன்றவை இதில் அடங்கும். இதனால் அவர்களுக்கு ஒரு துணை கிடைப்பதுடன் தேவைக்கு உதவ நீங்களும் அங்கு இருப்பீர்கள். ஆனால் உங்களிடம்**

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com.*

For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*
© People for Education 2009
THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

toronto community foundation

# Homework

- உதவி கேட்கப்பட்டால் மட்டுமே உதவி செய்ய முன்வாருங்கள்.
- வயதில் குறைந்த பிள்ளைகளுடன் சேர்ந்து (எந்த மொழியில் என்றாலும்) புத்தகங்களை வாசியுங்கள். வயதில் கூடிய பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் தாமாகவே புத்தகங்களை வாசிக்கும்படி ஊக்குவியுங்கள்.
- பாடசாலை பற்றி உங்கள் பிள்ளைகளிடம் ஒவ்வொரு நாளும் கதையுங்கள். சம்பந்தப்பட்ட விடயத் தலைப்பினை நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும், ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழி உங்களது முதன்மையான பாஷையாக இல்லாதபோதிலும் அவர்கள் சொல்வதை நன்கு கேட்கும் ஒருவராக நீங்கள் அமையலாம். பாடசாலைபற்றி பிள்ளைகளுடன் சாதாரணமாகக் கதைப்பதன் மூலம் பிள்ளைகள் பாடசாலையில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை அதிகரிக்க முடியும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது.
- வீட்டுவேலை செய்ய மாணவர்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் அவர்களிடம் இருப்பதை உறுதிசெய்யுங்கள்- உதாரணமாக, பென்சில்கள், அடிமட்டங்கள், மார்க்கர்கள், காகிதம்.

### மாணவரின் வீட்டுவேலையில் கஷ்டம் இருந்தால் என்ன செய்வது?

- மாணவர்களுக்கு உதவி தேவைப்பட்டால் அதுபற்றி ஆசிரியரிடம் கதைக்கும்படி அவர்களை ஊக்குவியுங்கள். ஏதாவது ஒன்று அவர்களுக்கு விளங்கவில்லை என்றால் அதற்காக உதவியினைக் கோருவது சரியான செய்கைதான் என்பதை உங்கள் பிள்ளை அறிந்து கொள்ளட்டும்.
- வீட்டு வேலை உங்கள் பிள்ளைக்கு விளங்கவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பாடத்தை ஆசிரியர் எப்படிக் கற்பித்தார் என்று கேளுங்கள். முன்பு தான் கற்றதை ஞாபகத்துக்குக் கொண்டுவர இது உங்கள் பிள்ளைக்கு உதவும். கேள்விக்கான பதிலை எப்படிப் பெறுவது என்றும் பிள்ளை கண்டுபிடிக்க முடியும்.
- உங்கள் பிள்ளை விரக்தி கொள்ளுகிறது அல்லது குழம்புகிறது என்றால் அவரைச் சற்று ஓய்வு எடுக்கும்படி செய்து, சற்று நேரத்தின் பின்னர் மீண்டும் முயலும்படி செய்யுங்கள்.
- மாணவர் தம்மால் முடிந்த அளவு முயற்சி எடுத்த போதிலும் வீட்டுவேலையை முடிப்பதற்கு அவருக்கு இயலவில்லை என்றால் அந்தவேலையைப் பூரணமாகாத நிலையில் பாடசாலைக்கு திருப்பி அனுப்புவதில் தவறில்லை. வீட்டுவேலைக் காகிதத்தில் அல்லது மாணவரின் பாடசாலை நிகழ்வுக் குறிப்புப் புத்தகத்தில் ஏன் அந்த வீட்டுவேலையைப் பூரணமாக்க முடியவில்லை என்று ஒரு விளக்கக் குறிப்பினை நீங்கள் எழுதி அனுப்புங்கள். அதில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எவை என்று ஆசிரியர் புரிந்து கொள்ள அது உதவுவதுடன், உங்கள் பிள்ளையின் கல்வியில் நீங்கள் ஈடுபாடு கொண்டுள்ளீர்கள் என அறிவதில் ஆசிரியருக்கு மகிழ்ச்சி உண்டாகும்.
- உங்கள் பிள்ளை தொடர்ச்சியாகத் தனது வீட்டுவேலையைச் செய்யமுடியாது இருக்குமானால் ஆசிரியருடன் அதுபற்றி கதைப்பதற்கு ஒரு சந்திப்பினை ஏற்பாடு செய்யுங்கள்.

### வீட்டுவேலைக்கான ஆதரவு வசதிகள் பெறும் பிற வழிகள்

- பாடசாலை மூலம் அல்லது உள்ளூர் நூலகம் மற்றும் சமூகநிலையம் வழியாக வீட்டுவேலை தொடர்பாக எவ்வித ஆதரவு உதவி வசதிகள்

  கிடைக்கின்றன என்று கண்டறியுங்கள். சில பாடசாலைகளிலும் பல பொதுசன நூல்நிலையங்களிலும் பாடசாலை நேரத்தின் பின்பு வீட்டுவேலைக்கு உதவும் உதவிக்குழுக்கள் (homework clubs) செயல்படுகின்றன.
- மாணவர்கள் தமது நண்பர்கள் அல்லது உடன்பிறந்தோரிடம் இருந்து உதவி பெறமுடியும்.
- அநேக உயர்பாடசாலைகளில் ஒத்தவயதுக் கல்வித்துணையாளர்கள் (peer tutors) உள்ளனர். சம்பந்தப்பட்ட பாடங்களை முன்பு படித்துப் பூர்த்தி செய்த இவர்கள் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் உதவ முடியும்.
- உயர் பாடசாலை மாணவர்களுக்கு உதவுதற்கு இலவசமான ஒரு கல்வித்துணைச் சேவை www.ilc.org என்ற இணையத் தளத்தில் வழங்கப்படுகிறது. இந்தத் தளத்தில் தொழில் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்கள் ஞாயிறு முதல் வியாழன் வரையான நாட்களில் உதவுவதற்கு இருக்கிறார்கள். கட்டுரைகள் வாசித்துக் கருத்துக் கூறும் சேவையையும் இவர்கள் வழங்குகிறார்கள்.
- பல வகுப்பு மட்டங்களில் கணினி வழியிலான பாடங்களையும் கற்கும் செயல்பாடுகளையும் சில கல்விச் சபைகள் வழங்குகின்றன. இதுபற்றிய தகவலினைப் பெறுவதற்கு உங்கள் கல்விச்சபையின் இணைய வலையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

People for Education is an independent parents' group working to support public education in Ontario's English, French and Catholic schools.

You can reach us at: P.O. Box 64, Station P, Toronto, Ontario, M5S 2S6
Phone: 416-534-0100 • fax: 416-536-0100 • email: info@peopleforeducation.com or visit: www.peopleforeducation.com